## கவிதைப்பேழை

## காலக்கணிதம்

**- கண்ணதாசன்**

**முன்னுரை :**

கவிஞன் என்பவன் யார்? அவன் குணம் என்ன? அவன் பணி என்ன ? மனம் இன்னும் வயலில், சொல்லேர் உழவனாக ,சிந்தனை விதையைத் தூவி, மடமைகளைக் களைபறித்து ,தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன் .காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவன் ஆகிறான் .

**ஆசிரியர் குறிப்பு :**

*கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா

*சிவகங்கை மாவட்டத்தின் சிறுகூடல்பட்டியில் பிறந்தவர்

*இவரின் பெற்றோர்கள் சாத்தப்பன், விசாலாட்சி

*1949 ஆம் ஆண்டு திரையுலகில் பாடல் எழுதத் தொடங்கினார்

*திரை உலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர்

*சிறந்த கவியரங்கப் பேச்சாளர்

*தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்

*இவர் எழுதிய சேரமான் காதலி என்னும் வரலாற்று நாவல் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளது .

*திரைப்படப் பாடலின் மூலம் எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர் .

*அர்த்தமுள்ள இந்துமதம், ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி ,இயேசுகாவியம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

**பாடலின் பொருள்:**

கவிஞனாகிய நான் காலத்தை கணக்கிடும் கணிதமாவேன். என் கருத்தினில் தோன்றியப் பொருளை உலகில் உள்ளோர் அனைவரும் அறியும்படி தெரிவிப்பேன். இப்பூமியில் நாம் அனைவராலும் போற்றப்படும் தெய்வம் போன்றவன் ஆவேன். இவ்வுலகில் உள்ள பொன்னைக் காட்டிலும் உயர்ந்தது என் கவிதைச் செல்வம் . இவை சரி என்று கூறுவதே என் தொழில் . இந்தச் செயலோ கருத்தோ தவறு என்று நினைத்தால் அதனைத் தவறு என்று கூறுவதே என் பணியாகும். இறைவனும் நானும் உண்டாக்குதல், கொடுத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் அறிந்தோர்கள் என்பதை நீங்களும் அறிவீர்களாக.

**பாடல் விளக்கம்;**

பணம் படைத்த செல்வந்தர்கள் என்னை சிவக்க வைக்க எண்ணினால் நான் அவர்களிடம் சிறைபட மாட்டேன் .அரசினர் பதவி ஆகிய அதிகார வாளுக்கும் அஞ்சமாட்டேன். என் உள்ளத்திலே அன்பினை வளர்த்தேன். ஆசை தரும் எல்லாவற்றையும் விரும்புவேன்.என்னிடம் இருக்கும் ஆயின் பிறர் உண்ணவும் கொடுப்பேன். இல்லையாயின் நம்மவர் இல்லக் கதவுகளைத் தட்டுவேன்.வாசமுள்ள மலர்களில் அமர்ந்து வாயால் தேனைப் பருகி ஊரில் உள்ள அனைவருக்கும் தருவேன். முன்னோர் கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன்,கம்பர் ஆகியோர் கூறாத சில கருத்துக்களையும் கூறுவேன்.

**பாடல் விளக்கம் :**

பிறர் என்னை புகழ்ந்தாலும் நான் உணர்வு வயப்படமாட்டேன் .இகழ்ந்தாலும் அதனால் மனம் தளரவும் மாட்டேன்.நான் எழுதிய வளமான கவிதைகளே என்னுடைய வாக்குமூலங்கள் .நான் உலகிலிருந்து மறைந்தபோது தீர்ப்பை எழுதுங்கள். நான் கல்லாக, மரமாக, காடாக , மேடாக,காட்டில் வாழும் விலங்காக மாறாமல் இருக்க வேண்டும் என நினைக்கிறேன் .

**பாடல் விளக்கம்** :

உலகில் மாற்றம் அடைவதே மானிடத்தின் கருத்தாகும். நாளும் மாறக்கூடிய உலகின் தத்துவம் நான் அறிவேன். உலகில் எவையெவை தீமை தருவன எவையெவை நன்மை தருவன என்பதை அறிந்தே அவ்வழியில் செல்பவன் நான்.அரசியல் தலைவர்கள் மாறுவார்கள். அரசாங்கமும் மாறும்.ஆனால் தத்துவம் மட்டுமே மட்டுமே அட்சய பாத்திரம் போல் எடுக்க எடுக்க குறையாது. எனவே கொள்வோர் கொள்க, குறை கூறுவோர் குறை கண்டு ஓலமிடுக, உங்கள் உள்வாய் வார்த்தை என்னுடைய உடலையும் பாதிக்கச் செய்யாது. தொடக்கமும் நானே, முடிப்பதும் நானே, நான் உரைப்பதே சட்டமாகும்